# 50. திருப்போரூர்.



*பண் – சீகாமரம்.*

**சொ**ல்வி லாசம றாத நான்மறை
தூய சோதியென் றோது மாகதி
நல்கி யாளவெனு ணட மாட வாவரிய
கல்வி கேள்வியி னால வாவலி
காதி மேலடி பாடு மாதமிழ்ச்
செல்வர் நாயகனே திருப் போரூ ரம்மானே. 1

**மூ**வர் சூழ்முத லாய வோர்சிவன்
மூல வோமுரு கோனென் றானதை
யாவர் தாமறிவா ரடி யார லாமலுயர்
நாவர் பாடுன தேசி லாவடி
ஞான மீகுதி கானல் வேலவ
தேவர் நாயகனே திருப் போரூ ரம்மானே. 2

**பா**ட்டி லேபுக ழேழை யேன்மிடி
பாற வோரருள் கூர்தி மாமலை
ஆட்டி காதலனே யற வோர்சி காமணியே
நாட்டு மூடரு மாரி போலிசை
பாட வேயவர் நாவி லேவரி
தீட்டு நாயகனே திருப் போரூ ரம்மானே. 3

**க**ருப்பு காநிலை கூட வேயிரு
காலை யேகரு தேழை யேனொரு
விருப்பு மேன்மையுற விரை யார்ப தந்தாராய்
இருப்பு மாதவ ரீச னேகும
ரேச னேயடி சேரு மாறுயிர்
திருப்பு நாயகனே திருப் போரூ ரம்மானே. 4

**மா**ண்டு சூதக மேவு பாசறை
மாற வேநினை யேழை யேனனி
வேண்டு மீசுரனே விரை யார்ப தந்தாராய்
ஆண்டு சேர்மதி வார மோரையி
லாத பூரண வாசி லாவுயிர்
தீண்டு நாயகனே திருப் போரூ ரம்மானே. 5

**சீ**ரு லாமடி சேர வேயரு
டேவ னேயெனு மேழை யேனுளம்
ஒரு மீசுரனே யெனக் கோகை யோடருளாய்
ஏரு லாமயி லீச கானவ
ரேழை பூவணி யேறு தோளது
சேரு நாயகனே திருப் போரூ ரம்மானே. 6

**பு**ருட னானதுன் பால தாகவெ
னானி னைந்திடு போத னேனகக்
குருடு தானறவே யருள் கூரி ளங்கோவே
முருட ரூரிடை யோரி ராவெழின்
மூல நாயக மான மானினைத்
திருடு நாயகனே திருப் போரூ ரம்மானே. 7

---

***6. சேர்தல் =*** *புல்லுதல். ஆகலின் மணமாலை யேறும்படியான தோள் தீண்டு தலைவனெனற்பாலது "பூவணி யேறு தோளது சேரு நாயகனே" என வியம்பப்பட்டதென்க.*

*7. திருடல் இன்னதெனக் குறிப்புரை யுழைக் கூறியாயிற்றால். (முதல் மண்டலம் 7ல் 8 காண்க)*

**கு**றுக்க நீடலி லாவு னேரருள்
கோட லேகதி யாமெ னாநினை
சிறுக்க னேனைவிடா தடி சேரி ளங்கோவே
நறுக்கொ ணாவுர னால றாவயி
னாத காவென வோது வார்வினை
செறுக்கு நாயகனே திருப் போரூ ரம்மானே. 8

**நீ**ர்க்கு ளேதிரி வாளை பாய்விரி
தாழை நீள்கமு கோதி சூழ்வளம்
ஆர்க்கும் வேதகிரி யர னார்தி ருச்சேயே
பார்க்கு ளேதிரி யேழை யேன்வினை
பாற வேயருள் பாடு வார்துயர்
தீர்க்கு நாயகனே திருப் போரூ ரம்மானே. 9

**பொ**ய்த வாவுரை யேனை மேனிலை
போக வேயருள் கூர்தென் மாகவி
பெய்த ஞானவெளிப் பெய ரானு ளத்தேவே
பைத லாலிரு தேவர் தேடிய
பார மாதிரப் பேரன் மாதுதி
செய்த நாயகனே திருப் போரூ ரம்மானே. 10

சார்வரி வருடம் ஆவணி மாதம் 22ஆம் தேதி குருவாரம்.